செய்தி வெளியீடு எண்: 1047 நாள் – 28.11.2008

# சென்னை மாநகரத்தில் பெருமழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதலமைச்சர் கலைஞர் இன்று பார்வையிட்டார்.

...

இன்று (28.11.2008) காலை சென்னை மாநகரத்தில் பெருமழையினால் பாதிக்கப்பட்ட கோட்டூர்புரம், காந்தி மண்டபம், சைதாப்பேட்டை, கீழ்ப்பாக்கம், பெரம்பூர் ஆகிய பகுதிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார். அந்த பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளித்ததுடன், நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரசு அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கி ஊக்கப்படுத்தினார். காந்தி மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரொட்டிகள் வழங்கினார். அவர்களுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் மருந்துகள் பற்றிய விவரங்களை மாநகராட்சி அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெரம்பூரில் செய்தியாளர்களிடம் பேசும்போது, “மத்திய அரசு மாநில அரசுக்கு தேவையான நிவாரண நிதி உதவிகளை வழங்கிடுமென்று எதிர்பார்க்கிறேன். தமிழ்நாட்டில் புயல்–தொடர்ந்து பெய்து வரும் பெருமழையினால் ஏற்பட்டுள்ள சேத விவரங்கள் மத்திய அரசுக்குத் தரப்பட்டுள்ளன. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனும் இன்று அதிகாலை நானே தொலைபேசியில் நேரடியாகத் தொடர்பு கொண்டு, அந்தந்த மாவட்டங்களில் சேத விபரங்களைக் கேட்டறிந்துள்ளேன். மாவட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு செய்ய வேண்டிய நிவாரண உதவிகள் அனைத்தும் உடனடியாகச் செய்யப்படும்” என்று கூறினார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன் மாண்புமிகு உணவு அமைச்சர் திரு எ.வ.வேலு, சென்னை மாநகராட்சி மேயர் திரு மா.சுப்பிரமணியம், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் திரு.ஆயிரம்விளக்கு உசேன், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ்.ஸ்ரீபதி, சென்னை மாநகராட்சி ஆணையர் திரு ராஜேஷ் லக்கானி, சென்னை மாநகர காவல் துறை ஆணையாளர் திரு.ராதாகிருஷ்ணன் ஆகியோர் சென்றனர்.

*****

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9